தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, பிப்ரவரி 28, சனிக்கிழமை.

மாசி 16, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.''

வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. டி. கே. ராஜு 23–12–1986 ஆம் தேதியன்றும், திரு. கே. என். நடராஜ கவுண்டர் 14–1–1987 ஆம் தேதியன்றும், திரு. பூ. எட்டியப்பன் 25–1–1987 ஆம் தேதியன்றும், திரு. ஏ. காமேஸ்வர ராவ் 30–1–1987 ஆம் தேதியன்றும், திரு. ஆர். பாபு கோவிந்தராசன் 3–2–1987 ஆம் தேதியன்றும், திரு. ஆர். ஏ. நடராஜ முதலியார் 8–2–1987 ஆம் தேதியன்றும், திரு. ஜி. வாகீசம் பிள்ளை 21–2–1987 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. கே. ராஜு அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பொது தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர் அவர்கள் 1950 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த

சென்னை சட்டமன்றப் பேரவைக்கும் மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட்டம் காங்கேயம் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பூ. எட்டியப்பன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை வடாற்காடு மாவட்டம் பெரணமல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. காமேஸ்வர ராவ் அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை குண்டூர் மற்றும் தெனாலி நகரப் பொது தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். பாபு கோவிந்தராசன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையும் தென்னாற்காடு மாவட்டம் கடலூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். ஏ. நடராஜ முதலியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜி. வாகீசம் பிள்ளை அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் பொது தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

TRUTH ALONE TRIUMPHS